**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI**
**OS No.152/2019**

**2024**ம் வருடம் டிசம்பர் திங்கள் 26ம் நாள் வாதி தரப்பில் 1வது சாட்சியத்தின் வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10வது விதியின் படி திருமதி.சேதுராணி, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் : திருமதி.முத்துநாச்சி (PW1)

தந்தை / கணவர் பெயர் :

தொழில் :

வயது :

<u>வாதி தரப்பில் முதல் விசாரணை</u>:

1. நான் இவ்வழக்கின் 2ம் வாதி ஆவேன். 1ம் வாதியான நீலமேகம் எனது கணவர். அவர் இறந்து விட்டார். 3 முதல் 6 வாதிகள் எனது மக்கள். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை படித்துப் பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தை எனது முதல் விசாரணை வாக்குமூலமாக ஏற்றுக்கொள்ள பிராத்திக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

2. 10.08.1967ம் தேதியன்று எனது மாமனார் காயாம்பு என்பவர் பாண்டிகோனார் வகையறாவிடமிருந்து கிரையம் பெற்ற கிரைய ஆவண எண்.1463/1967ல் தாவா சொத்து கிழக்கு மாலாக காட்டப்பட்டுள்ளது என்பதற்கு தாக்கல் செய்யும் கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகும்.

3. 18.11.1968 ம் தேதியன்று எனது மாமனார் காயாம்பு என்பவர் முனியம்மாள் வகையறாவிடமிருந்து கிரையம் பெற்ற கிரைய ஆவண எண்.2150/1968 ல் தாவா சொத்து கிழக்கு மாலாக காட்டப்பட்டுள்ளது என்பதற்கு தாக்கல் செய்யும் கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகும்.

4. 27.10.1993 ம் தேதியன்று எனது மாமியார் மற்றும் அவரது சகோதரிகள் எனது கணவருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவண எண்.576/1993 ன் அசல் வா.சா.ஆ.3 ஆகும்.

5. சர்வே எண்.445/2011 க்கு ஏற்பட்ட மனைவரி பட்டா எண்.1006 ன் அசல் வா.சா.ஆ.4 ஆகும்.

6. சர்வே எண்.445/2011 க்கு எனது மாமனார் மற்றும் 3 நபர்கள் பெயரில் ஏற்பட்ட சிட்டா வா.சா.ஆ.5 ஆகும்.

7. சர்வே எண்.445/2011 க்கு எனது கணவர் மற்றும் 3 நபர்கள் பெயரில் ஏற்பட்ட அடங்கல் பதிவேடு வா.சா.ஆ.6 ஆகும்.

8. தாவா சொத்தின் புல வரைபடம் வா.சா.ஆ.7 ஆகும்.

9. தாவா சொத்தை ஆணையர் பார்வையிட்டு தாக்கல் செய்த ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ.1 ஆகும்.

10. தாவா சொத்தை ஆணையர் பார்வையிட்டு தாக்கல் செய்த வரைபடம் நீ.ம.சா.ஆ.2 ஆகும்.

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

ஒம்/J.சங்கீதா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி (மு.கூ.பொ)